# ஆரம்பகால குருகுலகல்வி நடைமுறைகளுக்கும் தற்கால கல்வி நடைமுறைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் : ஓர் ஆய்வு

ப. தாரணி

*மொழித்துறை, கலை கலாசார பீடம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்*

thaaranipancha@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

கல்வி (Eduction) என்பது குழந்தைகளை மற்றும் மன வளர்ச்சியில் அறிவு, நல்லொழுக்கம் போன்ற பண்புகளுடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். சான்றோர்களின் கூற்றின் படி இளைய தலை முறையை முறையாக வழி நடத்துவதிலும் சமுதாயத்தில் பங்களிப்பு செய்ய வைப்பதிலும் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. ஆரம்ப காலங்களில் சமூகத்தில் ஏற்றத் தாழ்வு இல்லாமல் மாணவர்கள் சமத்துவமாக காணப்பட வேணடும் என்பதற்காக குருகுலகல்வி வழங்கப்பட்டது. குருகுலகல்வியில் ஆன்மீக கல்வியே முக்கியமாக போதிக்கப்பட்டது. தற்காலத்தில் தகுந்த சூழ்நிலைகளை உருவாக்கி மனிதர்களின் உளள் ஈர்நத் தகைமைகளை வெளியில் கொணடு வருவதாக தற்கால கல்வி வழங்கப்படுகிறது. கல்வி என்ற தமிழ் சொல் கல் என்ற வேர்ச்சொல்லில் இருநது தோன்றியது. கல்வியின் ஆங்கில வடிவமான Education ஆனது educatio எனும் இலத்தீன் மொழிச் சொல்லில் இருநந் உருவானது. இது வளர்தல் எனும் பொருளை குறிக்கிறது. கல்வியின் உள்ளாரந்த எண்ணக்கருக்களை ஆராயும் இடத்து குருகுலகல்வி முறைகளுக்கும் தற்கால கல்வி முறைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் பல காணப்படுகின்றன. ஆரம்பகால குருகுல கல்வி நடைமுறைகள் தற்கால கல்வி நடைமுறைகளில் பின்பற்றப்படுகிறதா? என்பதும் இவ்விரு நடை முறைகளும் அடிப்படைகளில் ஒத்த தன்மைகளை கொணட்னவா? என்பதும் ஆய்வு பிரச்சினைகளாக அமைந்தன. இவ்விரு நடைமுறைகளினதும் அடிப்படை நோக்கங்களின் வேறுபாட்டுத்தன்மைகள் மற்றும் இவற்றின் வேறுபாட்டு தன்மையான நோக்கங்கள் பற்றி இதுவரை ஆராயப்படவில்லை எனும் ஆய்வு இடை வெளியினை அடிப்படையாக கொணடது இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்ப கால குருகுலகல்வி நடைமுறைகளை இனங்காணப்தோடு தற்கால கல்வி நடை முறைகளையும் இனங்கணடு இவ்விரு நடை முறைகளில் உள்ள இடைவினைகளை மதிப்பிட்டு சமுகத்தில் மக்கள் மத்தியில் கல்வி பெறும் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தல் என்பன ஆய்வின் நோக்கங்களாகும். இவ் ஆய்வில் ஒப்பிட்டு விபரண ஆய்வு முறை, வரலாற்று ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை என்பன பயனப்டுத்தப்பட உளள்ன. கல்வி கற்றலின் பயன் கல்வி கற்றலின் முக்கியத்துவம், கல்வி வழங்கும் முறைகள் கல்வி செயற்பாட்டின் அடிப்படை அம்சங்கள் என்பவற்றின் வாயிலாக குருகுல கல்வி தற்கால கல்வி எனும் இரு கல்வி நடைமுறைகளும் மக்கள் எண்ணங்களில் பலவகையாக எண்ணக்கருக்களை விதைக்கின்றன.

**திறவுசொற்கள்:** குருகுலகல்வி, தற்கால கல்வி, மாணவர், சமூகம்

## அறிமுகம்

கல்வி என்பது ஒரு சமூக நிறுவனமாகும். அறிவு திறமை போன்றவற்றை வழங்கி ஒரு புதிய சமுகத்தை உருவாக்கி பண்பாடு, நடத்தை போன்றவற்றையும் வழங்கி மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உளள் மனிதனாக மாற்றம் அடைய செய்கிறது. கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கை முழுவதும் தொடர்கிறது. ஆனால் மனிதர்கள் குழநன் தப் பருவத்தில் கல்வி கற்கும் போது முழுமையான பரிணாமம் அடைத்த மனிதனாகவும் சமுதாயத்திற்கு உதவிகளை அளிக்கும் மனிதனாகவும் மாற்றம் அடைகின்றான். ஆரம்ப காலங்களில் வர்ணாச்சிரம தர்மநெறியில் பிரம்மசரியமாகிய முதல்நிலை கல்வி கற்கும் நிலையாகும். பிரம்மச்சரிய நிலையில் காணப்படும் மாணவர்கள் குருகுலம் சென்று கல்வி கற்பது அக்கால வழமையாக காணப்பட்டது. கல்வி என்பதனை "மெய்பபொருள் காண்பது அறிவு" என்றார் வள்ளுவர்.

மாணாக்கன் குருவின் இல்லம் நாடி சென்று குருவைத் தெய்வமாக மதித்து குருவிற்கு பணிவிடை செய்து குருவின் கட்டளைக்களுக்கு கீழ் படிந்து அறிவியல்களையும் கலைகளையும் கற்றுக்கொள்ளும் முறையே குருகுலகல்வி முறையாகும். வேதநூல்களில் கல்வி பற்றி கூறப்படுகிறது. குருவின் இல்லத்தில் பல்வேறு வகையான பாடங்கள் கற்பிக்கப்பட்டு உள்ளன.

சந்தியாவந்தனம் - 1ம் பாடம்

காயத்திரி மந்திரம் - 2ம் பாடம்

மூச்சடங்கல்

தர்பணம்

ஆசமனம் செய்தல்

வேதப்பயிற்சி குருகுல பாடங்களில் முக்கியமானதாகும். பதபாடம், கிரமபாட முறைகளில் வேத பாடல்களை திருத்தமாக மனனம் செய்ய குருவினால் கற்பிக்கப்பட்டுளள்து. வேதம், வேதாங்கம், அறுவகை சமயங்கள், வானியல், கணிதம், உளவியல் போன்றவைகளும் கற்பிக்கப்பட்டன. ஆரம்பகாலத்தில் குருகுல கல்வி இடம் பெற்றுளள்மையை இதிகாச புராணங்களில் ஊடாகவும் பிறநாட்டு அறிஞர்களின் குறிப்புக்கள் மூலமும் நாம் இனங்காணலாம். வாரணாசி, தட்சசீலம் போன்றன புத்தரின் கால புகழ் பெற்ற கல்வி சாலைகளாக திகழந்தன. இக்கல்வி சாலைகளில் மாணவர்களுக்கு குருகுல முறைப்படி புத்த ஜாதக கதைகள் கற்பிக்கப்பட்டன. குருகுலம் பிற்பட்ட காலத்தில் மடம் என அழைக்கப்பட்டது. சமண பௌத்த துறவிகள் அங்கு தங்கி தமக்கான பாடங்களை கற்றனர். உதாரணமாக நாலந்த மடத்தினை குறிப்பிடலாம்.

உலக ரீதியாக குருகுல கல்வி பற்றி நோக்குமிடத்து கி.மு. 2055 இல் எகிப்தில் பள்ளிக்கூடங்கள் காணப்பட்டன. பிளேட்டோ கிரேக்கத்தில் உளள் ஏதென்சு நகரத்தில் கி.மு. 387 இல் கல்விகூடம் ஒன்றை நிறுவினார் இவ் கல்விகூடம் தான் ஐரோப்பாவின் முதல் கல்வி கூடமாகும். பழங்கால இஸ்லாமிய பள்ளிகளில் இஸ்லாமிய மத கருத்துக்கள் கற்பிக்கப்பட்டன. படிப்படியாக பிற்காலத்தில் குருருலகல்வி வளர்ச்சி அடைந்து தற்காலத்தில் உலக நாடுகள ்மத்தியில் கல்வி இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது. கி.பி.1450 இல் Johannes Gutenberg என்பவரால் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு கல்வி விரைவாக அனைத்து உலக மக்களிடமும் பரவ தொடங்கியது.

தற்காலகல்வி முறை 15 ஆம் நூற்றாண்டின் பின் வளர்ச்சி அடைந்த கல்வி முறையாகும். மேலைத்தேய நாடுகளில் ஊற்றெடுத்த தற்கால கல்வி முறை ஐரோப்பியர்களின் வருகையினால் கீழைத்தேய நாடுகளிலும் பரிணாமம் கண்டது. தற்கால கல்வி முறை அரச சுற்றுநிருபணங்களுக்கு அமைவாக கல்வி திட்டங்களை மாணவர்களுக்கு வழங்குகிறது. தற்கால கல்வி முறையில் கல்வி அமைச்சின் கீழ் அனைத்து விதமான கற்றல் செயற்பாடுகளும் ஒவ்வொரு கல்வி நிர்வாக பிரிவுகளின் கீழும் நடைபெறுகின்றன. இக் கல்வி முறையில் மாணவர்களுக்கு ஆரம்ப கற்கை காலமான முன்பள்ளி கால கட்டத்தில் எழுத்துக்கள் எழுதும் முறை, உச்சரிப்பு முறை, சொல்லாக்கம் போன்ற கற்கைகள் ஆரம்ப கால கற்றல்களாக அமைகின்றன. அதன் பிற்பாடு தரம் 1 தொடக்கம் 5 வரையிலான மாணவர்களுக்கு அடிப்படை பாடங்களான தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், ஆங்கிலம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. தரம் 6 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களுக்கு அடிப்படை பாடங்களுடன் மேலதீகமாக தொகுதிப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. தொகுதிப் பாடங்களில் முதலாம் தொகுதியில் குடியியல், புவியியல் போன்ற பாடங்களும் இரண்டாம் தொகுதியில் சித்திரம், சங்கதீம், நடனம், நாடகம், இலக்கியநயம் போன்ற பாடங்களும் மூன்றாம் தொகுதியில் சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களும் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. இப் பாடங்கள் மாணவர்களின் தனித்தன்மையினையும் அவர்களின் ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன. ஏதிர்கால வாழ்வின் தொழில்வாய்பபுக்கான அடித்தளமாக அமைவது உயர்கல்வி ஆகும். கலை, வணிகம், விஞ்ஞானம். கணிதம் என்ற வகைப்பாட்டில் மாணவர்களுக்கு கல்வி வழங்கப்படுகிறது. பட்டப்படிப்பு கல்வி

பல்கலைக்கழகங்களிலும் கல்வியற்கல்லூரிகளிலும் போதிக்கப்படுகின்றுத. மாணவர்களின் எதிர்கால திட்டமிடலுடன் இணைந்த வகையில் தொழில் வாய்ப்புக்களை பெற்று தரும் கல்வியாக பட்டப்படிப்பு கல்வி அமைகிறது. இன்று பல நாடுகளில் இளைய சமுதாயத்தினருக்கு கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தற்கால கல்வியில் இரு பிரிவுகள் காணப்படுகின்றன.

1. முறைசார்ந்த கல்வி

2. முறைசாரா கல்வி

கற்பித்தல் துணுக்கங்களையும் பாடத்திட்டங்களையும் அனுபவங்களை உளள் டக்கியிருககும் சுதந்திரமான கல்வி முறைசார்நத் கல்வி ஆகும். இக்கல்வி பாடசாலை, பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள், பேராசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது. உளவியல், மெய்யியல், தகவல் தொழில் நுட்பம், மொழியியல், வரலாறு, சட்டம், உயிரியல், சமூகவியல், வானவியல், விலங்கியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படும். பயிற்சிகளையும் மதிப்புகளையும் அறிவையும் வளரகக உதவும் முறைகள் அடங்கிய கல்வி முறைசாரா கல்வி ஆகும். ஒரு குடும்பம் ஒன்றில் குழநந்தகளுக்கு கலாசாரம், மொழி ஆகியவற்றை கற்று கொடுக்கின்றது. செய்வன செய்யக்கூடாது என அறிவுறுத்தல், பழக்கவழக்கங்கள் போன்றவற்றின் மூலம் தங்கள் பண்பாட்டை கற்று கொடுத்தலே முறைசாரா கல்வி ஆகும். தற்கால கல்வி நடைமுறைகளில் கற்றல் அனுபவம் மாணவரின் உடல் வளரச்சி, உள வளர்ச்சி, உணர்வுகளின் வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய வளர்ச்சியை பெற உதவுகிறது. கற்றல் அனுபவம் மாணவர்களின் படிப்பு, ஆய்வுகள், விளையாட்டு, செயல்திட்டத்தில் ஈடுபடுதல், விவாதத்தில் பங்கேற்பு, குழு வேலை போன்றவற்றில் அடங்கி உள்ளது. இன்றைய காலகட்டத்தில் கல்வி இன்னும் பல முறைகளின் ஊடாகவும் வழங்கப்படுகிறது.

மாற்று முறை - மாற்றுப் பள்ளிகள் தானே கற்றல், இல்ல பள்ளிகள், பட்டறிவுக்கல்வி முறைகள் மூலம் கல்வி கற்றல். மாற்றுகல்வி முறையில் தோன்றும் பயனுளள் கருத்துகள் பொது கல்வியில் ஏற்று கொளள் ப்பட்டு பின் நடை முறைப்படுத்தப்படுகிறது. தொல்குடி சார்நத் கல்வி - நாடுகளில் பரம்பரை பரம்பரையாக வாழும் மக்களிடம் இருந்து வந்த அறிவு, பண்பாடு ஆகியவற்றை கல்வி முறையில் சேர்த்து வழங்கும் கல்வி முறையாகும். பல வகை படை எடுப்புக்களினால் அழிந்து வரும் ஓர் இனத்தின் அடையாளம் இக்கல்வி முறையினால் பாதுகாக்கப்படும். ஆரம்ப கட்டமான குருகுல கல்வி முறையில் குறிப்பிட்ட தொகை மாணவர்களே குருவிடம் சென்று கல்வி கற்றனர். காலப் போக்கில் நாகரீக பண்பாட்டு ரீதியான மாற்றங்களும் மக்கள் தொகை அதிகரிப்பாலும் கல்வியில் மாற்றங்களும் பல வளர்ச்சி நிலைகளும் ஏற்படலாயின.

**ஆய்வு பிரச்சினை**

கல்வி என்பது ஒருவர் தனது வாழ்வினை நல்வழியில் அமைத்து கொள்வதற்கு உதவும் சாதனமாகும். அதன் அடிப்படையில் ஆரம்பகாலம் தொடக்கம் தற்காலம் வரை கல்வி முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு கல்வியை பெறும் வகையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவ்வகையில் ஆரம்பகால குருகுல கல்வி முறைகளுக்கும் தற்கால கல்வி முறைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை இணங்கானலே இவ் ஆய்வின் பிரச்சினையாக கருதப்படுகிறது.

**ஆய்வின் நோக்கம்**

குருகுலகல்விக்கும் தற்கால கல்விக்கும் இடையிலான இடைவினைகளை அடையாளம் காணல் பிரதான நோக்கமாகவும் குருகுலகல்வி பற்றி எடுத்துரைத்தல், தற்கால கல்விமுறை குருகுலகல்வி முறையில் இருந்து எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்பதனை இணங்காணல் மற்றும் கல்வியின் முக்கியத்துவத்தை சமூகத்திற்கு எடுத்துரைத்தல் துணை நோக்கங்கங்களாகவும் கருதப்படுகின்றன.

**ஆய்வு இடைவெளி**

குருகுல கல்வி தொடர்பாக பல்வேறுபட்ட ஆய்வுகள் இடம் பெற்ற போதிலும் குருகுல கல்விக்கும் தற்கால கல்விக்கும் இடையிலான வேறுபாடுகள் பற்றி எநத்வொரு ஆய்வும் இடம்பெறவில்லை. அதனால் இவ்வாய்வு இடைவெளியை பூரத்தி செய்யும் முகமாக ஆய்வு மேற்கொளள் ப்படுளள்து.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வில் விபரண ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை, அடிப்படை ஆய்வு, வரலாற்று ஆய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. கூறவந்த விடயத்தை தெளிவாக விளக்குவதற்கும் குருருகுல கல்வி முறைகளுக்கும் இடையில் உளள் இடைவினைகளை ஆராய விபரண ஆய்வு முறையும் இந்து மூல நூல்களிலும் இதிகாச புராணக் கருத்துக்களில் காணப்படும் குருகுல கல்வி முறைகளை விளக்குவதற்கும் அவற்றில் கூறப்படும் விடயங்களை ஆராய்ந்து அவற்றின் முடிவுகளை கணடு கொளவ்தற்கு பகுப்பாய்வு முறையும் வரலாற்று ரீதியாக கல்வி செயற்பாட்டின் படிநிலைகளை அறிந்து கொளவ்தற்கு வரலாற்று ஆய்வு முறையும் பயன்பட்டுள்ளது.

**தரவு சேகரிக்கும் முறை**

இவ்வாய்வுக்கான தரவுகள் முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரணட்ாம் நிலை தரவுக் மூலம் பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவுகளாக இந்து மூல நூல்கள், கல்வி கோட்பாடுகள் பற்றி உருவான இலக்கியங்கள், புராண இதிகாசங்கள், தற்கால கல்வி தொடர்பான புத்தகங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரணட்ாம் நிலை தரவுகள் யாவும் கடந்த கால ஆய்வின் தரவுகள், சஞ்சிகைகள், இதர ஆக்கங்கள், ஆய்வு கட்டுரைகள், ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், இணையத்தளங்கள் என்பவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

கல்வி எனும் கண் என்ற பரமசிவானந்தம்,மு.அ அவர்களின் நூல் வாயிலாக தற்கால கல்வி நடைமுறைகள், தற்கால கல்வி திட்டங்கள் போன்ற விடயங்களை அறிய முடிந்தது.

துமிழநாட்டுப் பாடநூல் கழகத்தினால் வெளியிடப்பட்டுளள் இந்தியக்கல்வி முறை எனும் வளநூலின் ஊடாக தற்கால கல்வி முறையின் பாடத்திட்டங்கள் மற்றும் கல்வி போதிக்கும் முறை பற்றிய தரவுகளை பெற முடிந்தது.

குருகுல நூாற்பதிப்புச் சங்கம் வெளியிட்ட குருகுல வரலாறு எனும் நூலின் ஊடாக குருகுலத்தில் கற்பிக்கப்பட்ட பாடங்கள், குருகுலக்கல்வி நோக்கங்கள், குருகுலக்கல்வி முறைமைகள் போன்ற பற்றிய தெளிவினை பெற முடிந்தது.

பண்டைய கால கல்விமுறை எனும் ஆய்வுக் கட்டுரையின் ஊடாக குருகுலக்கல்வி முறைகள் பற்றிய தெளிவான தரவுகளை பெற முடிந்தது.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்**

கல்வி நோக்கங்கள், கல்வி போதிக்கும் இடம், கல்வி போதிக்கும் முறைகள், கல்வியை புகட்டுபவர்கள், கல்வியின் முக்கியத்துவம், கற்பிக்கப்பட்ட பாடங்கள் போன்ற விடயங்களில் இரு கல்வி முறைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ் ஆய்வில் மேற்குறிப்பிட்ட வேறுபாடுகள் பற்றிய தெளிவான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**கல்வி நோக்கங்கள்**

குருகுலகல்வியில் மோட்சம் அடைதலே கல்வியின் தலையான நோக்கமாக காணப்படுகிறது. குரு வழியாக கற்று அதன் வழி நடத்தலே மோட்சம் அடையும் வழியாகும். வாழ்க்கையின் நெறி, நோக்கம், பயன, வாழும் வகை, வாழும் முறை முதலிய அனைத்தையும் கல்வியின் வழி பெறுதலும் குருகுல

கல்வியின் நோக்கமாகும். நன்மை, தீமை, நிலையானது நிலையற்றது, உயர்வானது, தாழ்வானது, செய்ய ஏற்றது, செய்ய கூடாதது, பற்றை வளர்ப்பது, பற்றை நீக்குவது போன்ற அறிவுரைகளை வழங்குவதும் குருகுல கல்வியின் நோக்கமாகும். மண்ணை, விணல் ன, சுற்றுச்சூழலை, உயிரை, படைப்பின் தன்மையை அறிந்து விளங்கி கொண்டு அவற்றிக்கு ஏற்றதோர் வாழ்வியலை வகுத்து பின்பற்றிட வேதங்கள் உதவியது. அவ்வகையில் அண்டம், பிரபஞ்சம், உயிர், ஆன்மா, பற்றற்ற துறவு, பொருள் புலங்களின் கட்டுப்ப் ாடு முதலியவை பற்றி நடைமுறை அறிவை பெறுவதும் குருகுல கல்வியின் நோக்கமாகும். அத்தோடு ஒழுக்கம், சீலம், பணிவு, புலன்அடக்கம், தற்காப்பு, போரக் லை, மதிநுட்பம், புண்ணியம் செய்தல், கலைநயம் முதலியன பற்றிய வாழ்வியல் படிப்பினைகளை வழங்குவதும் குருகுல கல்வியின் நோக்கமாக காணப்பட்டது.

தற்கால கல்வியின் நோக்கங்களை நோக்குவோம். கல்வி எனும் கருத்தியலின் வளரச்சி, கல்வி அமைப்புகளின் இலக்குகள், மதிப்பீடுகள் மற்றும் சிந்தனைகள் பற்றிய கிரேக்க ரோமானியப் பண்பாட்டின் கருத்துக்களானது ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் கவனிக்கத்தக்க அளவில் நீட்சி அடைந்தன. இக்காலகட்டத்தில் கல்வி ஒப்பாய்வின் நோக்கமும் தேவையும் கால வெளியைக் கடந்து விரிவு அடைகின்றன. தற்கால கல்வியின் நோக்கங்களாக உடல், உளள்ம், மனவெழுச்சி, சமூக சிந்தனை, ஆன்மீக சிந்தனை வளர்த்தல், போன்ற அம்சங்களை மக்களின் வாழ்வோடு இணைத்து வழங்கல் தற்கால கல்வியின் முக்கிய நோக்கமாகும். ஒரு தனிமனிதனின் அறிவு, படைப்பாற்றல், பேசும் திறன் ஆகிய குணங்களை வழிகாட்டியாக இருந்து வளர்த்தல் தற்கால கல்வியின் நோக்கமாகும். கல்வி வழிகாட்டியாக இருப்பதால் தான் தனிமனிதனின் வாழ்க்கைக்கும், அவன் குறிக்கோளக்ளை அமைக்கவும் அதனை பெற்று கொள்ளவும். உதவியாக இருக்கிறது. வாழ்க்கையின் குறிக்கோளக்ளை அடையவும் மனிதனின் அறிவு, படைப்பாற்றல், சக்தி போன்றவற்றை பெற்று கொளவ்தும் தற்கால கல்வியின் நோக்கமாக அமைகிறது. சமூகத்தில் ஒர் ஆற்றல் மிக்க மானிடனாக விளங்குவதற்கும் சமூக மதிப்புகள், குறிக்கோள்கள், நம்பிக்கை, விருப்பங்கள், பழக்கவழக்கங்கள், பணப் ாடு போன்றவற்றை நல் முறையில் மக்கள் மனங்களில் விதைத்தலும் தற்கால கல்வியின் நோக்கமாக அமைகிறது. ஒரு தனி மனிதனின் திறமைகள், அவனது சமுகத்தில் நிலைபெற செய்வதும் தற்கால கல்வியின் நோக்கமாக அமைகிறது.

**கல்வி போதிக்கும் இடம்**

குருகுலக்கல்வி முறையில் கல்வியை போதிக்கும் இடம் குருகுலம் எனப்பட்டது. பண்டைய காலத்தில் கல்வி கற்று தரும் குருவின் ஆச்சிரமத்தில் மாணவர்கள் தங்கி குருவிற்கு பணிவிடை செய்து கொண்டே குருவின் அருகில் இருநது கல்வி பயிலும் இடம் குருகுலமாகும். சீடர்கள் குருவின் ஆச்சிரமத்திற்கு அனைத்து தேவையான வேலைகள் செய்து கொணடே கல்வி கற்க வேண்டும். குருகுலத்தில் கல்வி பயிலும் காலகட்டத்தில் மாணவர்கள் தங்கள் குடும்பத்தை விட்டு விலகி இருக்க வேணடும். கல்வி செயற்பாடு நிறைவடைந்த பின்னரே சீடர்கள் தமது இல்லங்களுக்கு செல்வார்கள். குருகுலங்களின் மேம்பாட்டிற்கு அரசர்கள், வணிகர்கள், மற்றவர்கள் பொருள் உதவி செய்தனர்.

தற்கால கல்வி முறையில் கல்வி போதிக்கும் இடங்களாக பாடசாலைகள், பல்கலைகழகங்கள், கல்லூாரிகள் காணப்படுகின்றன. வளர்ந்து வரும் நவீன நாகரிக முறைகளுக்கு அமைவாக இன்று மாணவர்களுக்கு தொழிநுட்ப முறைகளின் ஊடாகவும் கல்வி கற்பிக்கப்படுகிறது. பாடசாலை, பல்கலைகழகங்களில் அதிபர், ஆசிரியர், பேராசிரியர், விரிவுரையாளர் போன்றவர்கள் கல்வியை வழங்குகின்றனர். மாணவர்களுக்கான விடுதிகளும் பாடசாலை, பல்கலைகழகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் தமது இல்லங்களில் இருந்தும் விடுதிகளில் இருந்தும் கல்வியை கற்கின்றனர்.

**கல்வி போதிக்கும் முறைகள்**

குருகுலக்கல்வி முறையில் கல்வி ஆனது ஓதுதல், பயிற்சி போன்ற முறைகளின் ஊடாக வழங்கப்பட்டது. அதாவது அனைத்து கலைகளையும் கற்பதற்கான தேவைப்பாடு அக்கால குருகுல மாணவர்களிடையே காணப்பட்டது. காரணம் அவர்கள் எதிர்காலத்தில் அரசனாகவோ அமைச்சனாகவோ ஆசானாகவோ

வணிகனாகவோ வைத்தியனாகவோ போர் வீரனாகவோ வர வேண்டிய தேவை இருநத்மையால் கல்வியினை ஓதுதல் மற்றும் பயிற்சி முறைகளின் ஊடாக வழங்கப்பட்டது. அதாவது குருகுலக் கல்வியில் மாணவர்கள் கல்வி பயிலும் காலம் 12 வருடங்களாகும். இவ் 12 வருடங்களில் மாணவர்கள் அவர்களின் வயதெல்லைக்கு தகுந்தவாறு கல்வியினை கற்பாரக்ள். பதபாடம், கிரமபாட முறைகளில் வேத பாடல்களை திருத்தமாக மனனம் செய்ய குருவினால் கற்பிக்கப்பட்டுளள் து. போர்கலைகள், வைத்திய நுணுக்கங்கள் போன்றவைகள் மாணவர்களின் 14 வயது தொடக்கம் 19 வயது வரைக்குள் கற்பிக்கப்பட்டது. 7 தொடக்கம் 14 வயது வரையில் ஆன்மீகக்கல்வி வழங்கப்பட்டது.

தற்கால கல்வி முறையில் ஆரம்பகல்வி, தொடக்ககல்வி, உயர்நிலைக்கல்வி, மேல்நிலைக்கல்வி, பல்கலைக்கழகக்கல்வி போன்ற பிரிவு முறைகளின் ஊடாக மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்படுவதைக் காணலாம். முறையான கல்வி திட்டங்கள், கல்வி போதிக்கும் சுற்றுநிருபணங்கள் ஊடாக அரசாங்கம் மாணவர்களுக்கான கல்வியை வழங்குகிறது. ஆரம்ப கல்வி முறையில் மூன்று வயது முதல் ஆறு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வி போதிக்கப்படுகிறது. இக் கல்வி குழந்தையின் உடல், உணர்வு மற்றும் அறிவு வளர்சிக்கு முக்கியமானதாகும். தொடக்க கல்வி என்பது குழந்தை ஐந்து வயதில் தொடங்கி பத்து வயது வரை கல்வி கற்கும் நிலையாகும். இக் கல்வி நிலையில் தான் குழந்தைகளுக்கு சமூக மதிப்புகள்,

குறிக்கோள்கள், நம்பிக்கைகள், விருப்பங்கள், பழக்கவழக்கங்கள், பண்பாடு போன்றவற்றை விதைக்கும் ஆரம்ப இடமாகும். தொடக்க கல்வி முறை மூலம் குழந்தைகளுக்கு முதன்மையான கல்வியை வழங்குவதன் ஊடாக எதிரக்காலத்தில் நாட்டிற்கு ஒரு நற்பிரஜையை உருவாக்க முடியும். உயர்நிலை கல்வி என்பது மாணவன் 18 வயது வரை கல்வி கற்கும் நிலையாகும். மேல் நிலை கல்விக்கான அறிவை வழங்கல் இக்கல்வியின் நோக்கமாகும். மேல்நிலைக்கல்வி முறை மூலம் ஒரு மாணவனின் உயர் கல்விக்கு பின் அவனுடைய திறனக்ளைக் கண்டு அறிந்து அவனது திறமைகளுக்கு ஏற்ப அவன் கல்வியை வழங்க முடியும். மனிதனின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு வழிகாட்டும் கல்வியாக இக் கல்வி அமைகிறது. தற்காலத்தில் குறைபாடுகள் உள்ள குழநந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி முறை சிறப்பு கல்வி முறையாகும். இடிர்ட், சேய்கின், ஹேவ், கல்லுடெட் போன்ற ஆரம்ப கால மருத்துவர்கள் சிறப்புக்கல்விக்கு அடித்தளம் இட்டவர்களாக காணப்படுகின்றனர். ஆரம்ப காலங்களில் கடுமையான குறைபாடுகள் கொணட் வர்களுக்கு சிறப்பு கல்வி வழங்கப்படவில்லை. ஒரு சிலருகக் மட்டுமே சிறப்பு கல்வி வழங்கப்பட்டது. ஆனால் சமீபத்தில் இந்த கடுமையான கற்றல் அனுபவம் அனைவருக்கும் கிடைக்குமாறு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

**கல்வியை புகட்டுபவரக்ள்**

குருகுலக்கல்வியில் கல்வியை புகட்டுபவர் ''குரு'' என அழைகக்ப்பட்டார். உபநயனம் செய்யும் ஆசிரியர் கல்வி கற்பிப்பதில் ஆர்வம் உள்ளவராக இருகக் வேணடு ம். இடையறாது கல்வி கற்கும் மாணவர்களுக்கு சலிப்படையாமல் கல்வியை நன்கு போதிக்க வேண்டும். குருவானவர் கல்வி கற்றறிந்த செந்நெறியாளராக இருக்க வேணடும். அத்துடன் தெளிவான அறிவு உள்ளவராகவும் மனத்தூய்மை உள்ளவராகவும் அறநெறி தவறாமல் நல்நெறியில் வாழ்பவராகவும் பாரம்பரிய மிக்க நற்குடியில் பிறந்தவராகவும் காணப்பட வேண்டுமென கூறப்படுகின்றது. அத்தோடு குருவானவர் வேதங்களை கற்று அறிந்தவராகவும் பிரம்மத்தை அடைய வாழ்நாள்

முழுவதும் தூய்மையான வழியில் வாழ்வினை நடத்துபவராக இருகக் வேண்டும். வாயு புராணம் கல்வி புகட்டும் குருவினை பற்றி பின்வருமாறு எடுத்துரைக்கின்றது. ''குருவிற்குரிய இயல்புகளை உடைய பிராமண ஆசிரியர் கிடைக்காவிடின் இவ் இயல்புகளை உடைய ஒரு சத்திரியரிடமோ வைசியரிடமோ கல்வியைக் கற்கலாம்'' இங்கு குருவின் பிறப்பினை விட குருவின் தகுதியே முக்கியமாக கொள்ளப்படுகிறது. குருவானவர் அக்காலத்தில் ஆச்சாரியார், உபாத்தியார், குரு போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டார்.

தற்காலத்தில் கல்வியினை பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களை பல கட்டங்களாக வகுத்தும் அவர்களுக்கு பல பெயர்கள் வழங்கியும் நடைமுறையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அந்த வகையில் கற்பிப்பவர்களை ஆசிரியர்கள் என்று பொதுவாக கூறினாலும் பிரயோக ரீதியில் அவ்வாறு நடைமுறையில் இல்லை. எனவே பிளளைகள் மாணவர்களாக மாறுகின்ற முதற்படி முன்பள்ளி ஆகும். இது ஒவ்வொரு மாணவர்களுக்கும் முதற்கல்வியினை ஊட்டுகின்ற இடமாகும். இதில் மாணவர்களுக்கு கல்வியினை வழங்குகின்ற கற்பிப்போரை முன்பள்ளி ஆசிரியர்கள் என அழைக்கும் சட்ட மரபு காணப்படுகிறது. 1-5 தர மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் ஆரம்ப கல்வி ஆசிரியர்கள் என அழைக்கப்படுவார்கள். 611 தர மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் இடைநிலை ஆசிரியர்கள் எனப்படுகிறார்கள். உயர் தர மாணவர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் உயர்கல்வி ஆசிரியர்கள் என அழைக்கப்படுகிறார்கள். உயர் பட்டப்படிப்பு வழங்கப்படும் பல்கலைக்கழகங்களில் கல்வி செயற்பாடுகளை மேற்கொள்பவர்கள் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் என அழைக்கப்படுகிறார்கள். ஆசிரியர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் போன்றோர்கள் ஒழுக்கமுடையவர்களாகவும் கண்ணியம் உடையவர்களாகவும் மாணவர்களிடத்தில் அன்பு காட்டுபவர்களாகவும் உண்மை பேசுபவர்களாகவும் மாணவர்களுக்கு நல்ல முறையில் பாடங்களை போதிப்பவர்களாகவும் காணப்பட வேண்டும் என்பன தற்கால கல்வியை புகட்டுபவ்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகளாகும்.

**கல்வியின் முக்கியத்துவம்**

கல்வி என்பது மனித வாழ்வின் முக்கியமான ஒன்றாகும். அதன் அடிப்படையிலே ''கல்வி கண்போன்றது'' என்று சொல்லப்படுகிறது. கல்வி பயின்ற மனிதனை சான்றோன் என்று சொல்லும் இந்த சமூகம் கல்வி அறிவு இல்லாதவனை விலங்கினும் கழீ ஈானவன் என்று கூறுகிறது. கல்வி பயின்ற ஒரு மனிதனால் நிலவில் கால் பதிக்க முடியும். வானத்தில் பறக்க முடியும், கடலில் மிதக்க முடியும், இவ்வளவு உயர்ந்த கல்வி அறிவை அனைத்து மனிதர்களுக்கும் கொண்டு சேர்ப்பதே உலகத்தில் உளள் அனைத்து அரசுக்கும் தலையாய கடமையாக உள்ளது. கல்வி என்பது ''பள்ளிக்கு செல்வது பட்டம் பெறுவது மட்டும் அல்ல கல்வி உங்கள் அறிவை வளர்பப் து வாழ்வின் உண்மைகளை அறிந்து கொள்வதே ஆகும்'' என்று புகழ் பெற்ற அறிஞர் சகுந்தலா தேவி குறிப்பிடுகிறார்.

**குருகுலக்கல்வியின் முக்கியத்துவம்**

தற்கால கல்வி முறைகளுக்கு அடிப்படையாகவும் ஊன்றுகோலாகவும் அமைந்த கல்வி முறையே குருகுலக்கல்வி முறையாகும். அக்கால கல்வி முறையாகிய குருகுலக்கல்வி முறையானது மக்களிடம் மிகுந்த செல்வாக்கினை பெற்று காணப்பட்டது. அதாவது நாடாளும் மன்னன் பிளஸ் ளகளாக இருந்தால் கூட குருகுலம் சென்று கல்வி பயின்று தேர்ச்சி பெற்றால் தான் அவனுக்கு அரசாளும் பொறுப்பு வழங்கப்பட்டது. இளம் வயதில் அறிவு, ஆற்றல், விவேகம், வீரம், ஒழுக்கம் போன்றவற்றை மாணவர்கள கற்று ஒழுக குருகுலக்கல்வி இன்றியமையாத ஒன்றாக காணப்பட்டது. குருகுலக்கல்வியின் முக்கியத்துவத்தை புராண இதிகாச நூல்களின் ஊடாகவும் அக்காலத்தில் எழுந்த இலக்கியங்களின் ஊடாகவும் நாம் அறியலாம். துரோணர். வசிட்டர், யாக்ஞ்ஞுவல்லியர், திருவள்ளுவர், புத்தர் போன்ற ஆசான்கள் குருகுலக்கல்வியில் புகழ் பெற்றவர்கள். திருவள்ளுவர், ஔவையார் போன்ற மகான்கள் கல்வியைப் பற்றி சிறப்பாக கூறியுள்ளனர் உதாரணமாக திருவள்ளுவர் ''கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக'' என்றும் ''கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்ற வகை'' என்றும் கூறியுள்ளார். அதாவது கற்க தகுதியான நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும் பின்னர் அதற்கேற்ப தக்கபடி அவற்றைப் பின்பற்ற வேண்டும். மண்ணில் தோன்றுகின்ற அளவுக்கு நீர் சுரக்கும் அதுபோல மக்கள் எவ்வளவு கற்கின்றனர் எப்போதும் நீர் வற்றாத கிணறு போல அவர்களிடம் கல்வி இருந்து கொண்டே இருக்கும். நாம் சிறு வயதில் இருந்தே கல்வியை ஒழுங்காக கற்க வேணடும் என அக்கால குருகுலக்கல்வி முறை எடுத்துரைக்கின்றது. குருவிற்கு அருகில் இருநது் கேட்ட விடயங்கள் தான் பிற்காலத்தில் உபநிடதங்களாக தோற்றம் பெற்றமையைக் காணலாம்.

பண்டைய தமிழகத்தில் கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. கல்லாதவன் மனது ‘‘இருளின் உறைவிடம்’’ எனவும், கற்பதற்கான காலமாக ‘‘இளமைப் பருவமும்’’ கருதப்பட்டன. பழந்தமிழக ஆட்சியாளரக் ள ் தங்கள் கடமையை உணரந்திருந்தனர். எனவே தான் அவர்கள் தங்களது முதன்மை கடமையாக கல்வி வளரச்சியைக் கருதினர். அதனால் அரசர்களும், தலைவர்களும் மக்கள் கல்வி பெற அனைத்து நடவடிகன் ககளையும் எடுத்தனர். அறநூலான நாலடியார் ‘‘மிகுதியான நூல்களை ஆண்கள் சேகரித்து படிப்பது அவர்கள் வீடு முழுக்க ஒலித்தது’’ என குறிப்பிடுகிறது. இதன் வழியே அவர்கள் அறிவியல், கணிதம், பொறியியல், வானியல், தர்க்கம், நெறிமுறைகள் போன்றவற்றைப் படித்தனர் என்பதனை காண்பதன் ஊடாக குருகுலக்கல்வியின் முக்கியத்துவத்தை நாம் அறியலாம்.

அக்கால கல்வி பரவலாகவும் உயர் தரமானதாகவும் இருந்தது. சமணப் பள்ளிகளிலும் புத்த விகாரைகளிலும் இருநத் நூலகங்கள் மக்களிடையே மேம்பட்ட கல்வியைப் பெற உதவின. சங்க இலக்கியங்கள் மக்களின் அனைத்துப் பிரிவினரும், பெணக் ளும் முழு கல்வியறிவு பெற்று தகுதியானவர்களாக இருநத் தைக் காட்டுகின்றன, பழங்கால நாகரீகங்களில் பெண்கள் கல்வியறிவு மிக்கவர்களாக விளங்கியுள்ளமையை வரலாற்று நூல்களின் ஊடாக நாம் அறிந்து கொள்ளலாம். குருகுலக்கல்வியில் கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு போன்ற ஒழுங்கு முறைகள் மாணவன் பயிலும் கலைக்கு மேலதிகமாகக ் கற்பிக்கப்பட்டது. காலை எழுந்து காலைக் கடன்கள் மற்றும் யோகப்பயிற்சி முடித்து விட்டு குளித்தலில் இருந்து குருவுக்குத் தேவையான தொணடு கள் முதற்கொண்டு அவனுக்கு வழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுதல் மூலம் அங்கே ‘கடமை’ என்றால் என்ன என்பது கற்பிக்கப்பட்டது. குருகுலத்தில் வயதில் கூடிய பெரியோர்களை மதித்து நடத்தல சக மாணவர்களுடன் ஆரோக்கியமான போட்டிகளில் மட்டுமே ஈடுபடல, எவ்வளவு திறமைசாலியாக இருநத் ாலும் நாவடக்கம் பேணுதல் போன்றவற்றின் மூலம் அங்கே ‘கண்ணியம்’ என்றால் என்ன என்பது கற்பிக்கப்பட்டது குருகுலத்தில் பல சட்டதிட்டங்கள ் காணப்படும். அது தொடர்பாக மாணவனுக்கு குருவால் அறிவுறுத்தப்பட்டிருக்கும். உதாரணமாக சில குறிப்பிட்ட கட்டளைகளை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டியிருகக் ம உதாரணமாக வாய்ப்பாட்டு, நடனப் பயிற்சிகள் இளவெய்யில் முடியுமுன் முடிந்துவிடும். அப்போதுதான் குரல்வளம், உடல் வளம் சிறக்கும். இது போன்ற சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் மூலம் ‘கட்டுப்பாடு’ என்றால் என்ன என்பதும் கற்பிக்கப்பட்டது. இந்த மூன்றையும் (கடமை-கண்ணியம்கட்டுப்பாடு) தான் பயிலும் கலைக்கு மேலதிகமாக பயின்று குருகுலத்தில் இருநது வெளிவரும் நல்ல நடத்தையுள்ள மாணவனே நாட்டிற்கு நல்லதொரு குடிமகனாகவும் வீட்டிற்குப் பயனுள்ளவனாகவும் இருநத் ான் என்பது வரலாறு காட்டும் உண்மையாக உளள் து.

**தறக்கால கல்வியின் முக்கியத்துவம்**

கல்வி எமக்கு வாழ்வில் அத்தியாவசியமானதாகும். சின்னஞ் சிறு சிறார் முதல் பெரியவர் வரை அத்தியாவசியமானது. கல்வியின்றி மனிதன் இல்லை. எந்த வேலையாக இருநத்ாலும் கல்வி தான் தேவை. தற்காலத்தில் பணம் முக்கியமானது என்று கருதுகின்றனர் ஆனால் கல்வியே முக்கியமானது பணத்தால் கல்வியை வாங்க முடியாது. ‘‘இளமையில் கல்வி சிலையில் எழுத்து’’ என்ற சான்றோர் வாக்கிற்கு இணங்க

இளமையிலிருந்தே கல்வியைக் கற்கவேணடும். டாக்டர் அப்துல்கலாம், தத்துவ ஞானி சாக்ரடீஸ் போன்ற மேலும் பலர் உயர்வடைந்தது கல்வியாலே ஆகும். இவர்களைப் போல நாமும் வர வேண்டுமாயின் நன்றாக பயனுளள் கல்வியை கற்க வேணடும். நாம் எதிரக் ாலத்தில் எவ்வாறு ஆக வேண்டும் என்று பல கனவுகள் இருக்கும், அது மட்டும் இல்லாமல் நாம் நன்றாக கல்வியை கற்று உயர வேணடும். மனிதராய் பிறந்த ஒவ்வொருவரும் கல்வி கற்று உயர்வடைய வேண்டும். கல்வியை நெருப்பால் எரிக்க முடியாது, கள்வர்களால் திருட முடியாது, வெளள் த்தால் அடித்துச் செல்ல முடியாது, கல்வி கொடுகக் க் கொடுக்கக் கூடும். கல்வி ஒரு மனிதனை முழுமை ஆக்குகின்றது. நிலையாக வாழ கூடிய ஒரே செல்வம் கல்வியாகும். இளமையில் கல்வி கல்வியை கற்கும் போது நாம் கற்ற கல்வி எம்மை உயர்நத் இடத்துக்கு கொணடு செல்லும். பல பதவிகளை பெற்று தரும். சிறந்த கல்வியை கற்கும் போது சமூகம்

மத்தியில் அவரது வாழ்க்கை தரமும் உயர்வடையும். எண்ணும் எழுத்தும் கணெ ணனத் தகும் அதாவது கல்வி கண்களைப் போன்றது. யார் எம்மை கைவிட்டாலும் கற்ற கல்வி நம்மை கைவிடாது. ஒரு நாட்டின் மன்னனுக்கு தன் தேசத்தில் மட்டுமே சிறப்பு ஆனால் கற்றவனுக்கு செல்லும் இடமெல்லாம் சிறப்பு எனவே கல்வியை சிறப்புற கற்றால் பண்டிதன், வைத்தியர், வழக்கறிஞர், காவல்துறையினர், ஆசிரியர், கலைஞன் போன்றவர்களாக நாம் உயரலாம். எனவே எம் லட்சியத்தை நிறைவேற்ற நன்கு கற்கவேண்டும். தற்காலத்தில் உள்ள இயந்திரங்கள், கருவிகள ் போன்றவற்றை கையாள வேண்டுமாயின் கல்வி அவசியமான ஒன்றாகும். நாம் சிறுவயதில் ஆசைப்படும் தொழில்களை நிறைவேற்ற வேணடு மாயின் கல்வியறிவு தேவை எனவே நன்கு கற்று உயர்வோம்.

**கற்பிக்கப்பட்ட பாடங்கள்**

குருவின் இல்லத்தில் பல்வேறு வகையான பாடங்கள் கற்பிக்கப்பட்டு உள்ளன.

சந்தியாவந்தனம் - 1ம் பாடம்

காயத்திரி மந்திரம் - 2ம் பாடம்

மூச்சடங்கல் - 3ம் பாடம்

தர்பணம் - 4ம் பாடம்

ஆசமனம் செய்தல் - 5ம் பாடம்

சந்தியாவந்தனம் என்பது அதிகாலை வழிபாடு ஆகும். காயத்திரி மந்திரம் என்பது சூரிய கடவுளுக்குரிய வழிபாட்டு மந்திரம் ஆகும். ஏபபோதும் வெளிச்சமே உருவான சூரிய கடவுள ் எல்லாத்தையும் அவதானிப்பார் என்ற வகையில் இவ் மந்திர பயிற்சி பாடமாக கற்பிக்கப்பட்டது. மூச்சடங்கல் என்பது நீரினுள் சிறிது நாழிகை மூச்சு பிடித்து இருத்தல் ஆகும். தர்பணம் என்பது கதிரவனுக்கு நீர் வார்த்தல் ஆகும். ஆசமனம் செய்தல் என்பது நனீர சிறிதளவு உட்கொண்டு துப்புதல் ஆகும். வேதப்பயிற்சி குருகுல பாடங்களில் முக்கியமானதாகும். பதபாடம், கிரமபாட முறைகளில் வேத பாடல்களை திருத்தமாக மனனம் செய்ய குருவினால் கற்பிக்கப்பட்டுளள்து. வேதம், வேதாங்கம், அறுவகை சமயங்கள், வானியல், கணிதம், உளவியல் போன்றவைகளும் கற்பிக்கப்பட்டன. வேதாங்களில் கற்பம் - வேளவ் ிியை எவ்வாறு செய்தல் பற்றி கூறுகிறது. சிட்சை – வேதத்தை ஓதும் போது உச்சரிப்புக்களை அவதானித்து ஓதும் முறை பற்றி கூறுகிறது. சந்தஸ் - வேதத்தின் செய்யுள் அமைப்பையும் யாப்பு அமைப்பையும் கூறுகிறது. நிருத்தம் - திரிசொற்களை இலக்கண அமைப்பில் கூறுகிறது, வேத சொல் உருவாக்க முறை பற்றியும் எடுத்துரைக்கிறது. வியாவகாரம் - வேத சொல் எழுத்து முறை பற்றி கூறுகிறது. சோதிடம் - வானவியல், வேதங்களில் விதிகக் ப்பட்ட கருமங்கள் பற்றி கூறுகிறது.

தற்காலத்தில் முன்பள்ளி கற்கையில் மாணவர்களுக்கு எழுத்து உச்சரிப்பு முறைகள், எழுதும் முறைகள் போன்றன கற்பிக்கப்படுகின்றன. ஆரம்ப கல்வி முறையில் கணிதம், தமிழ், ஆங்கிலம், சுற்றாடல், சமயம், மனக்கணிதம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. 6 – 10 தரம் வரையில் மாணவர்களுக்கு தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், சங்கதீம், சித்திரம், நடனம், புவியியல், குடியியல், சுகாதாரக்கல்வி, சமயம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. உயர் தரத்தில் மாணவர்கள் உயிரியல், கணிதம், வணிகம், கலை போன்ற பிரிவுகளில் பாடங்களை கற்கின்றனர். கலைப் பிரிவில் தமிழ், வரலாறு, புவியியல், இந்துநாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், இஸ்லாமிய நாகரிகம், சங்கதீ ம், நடனம், மெய்யியவ், சமூகவியல் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. உயிரியல் பிரிவில் பௌதிகவியல், இராசயனவியல், உயிரியல் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. கணிதப் பிரிவில் பௌதிகவியல், இராசயனவியல், இணைந்த கணிதம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. வணிகப்பிரிவில் வணிகம், பொருளாதாரம் முகாமைத்துவம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. பல்கலைக் கழகங்களில் கலைப்பீடம், மருத்துவபீடம், தொழிநுட்பபீடம், பிரயோக விஞ்ஞானபீடம், பௌதீக விஞ்ஞானப்பீடம் போன்ற பிரிவுகளின் ஊடாக மேல்நிலை பட்டப்படிப்பு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

**முடிவுரை**

ஒருவர் இந்த உலகில் பெறுகின்ற அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி எனப்படும். அவ்வகையில் அக்காலத்தில் காணப்பட்ட குருகுலக்கல்வி முறைக்கும் தற்காலத்தில் காணப்படுகின்ற கல்வி முறைக்கும் இடையிலான வேறுபாடுகளை மேற்க்கூறிய தரவுகள் தெளிவுபடுத்துகின்றன. ஆரம்ப காலத்தில் கல்வியின்றி காட்டுமிரண்டிகளாக காடு, மலைகளில் வாழ்ந்த மனிதர்கள் காலப்போக்கில் சற்று பகுத்தறிவின் மூலம் முன்னோக்கி நகர்ந்தார்கள். இதன் பிற்பாடே கல்வி முறைகள் பற்றி சிந்திக்க ஆரம்பித்தார்கள். கல்வியின் முதற்படியாக பெற்றோர்கள் தங்கள் பிளள் ளகளுக்கு தாங்கள் பெற்ற வாழ்நாள் அனுபவங்கள் முழுவதையும் கல்வியாக வழங்கினார்கள். பின்பு குரு சீடர்கள் என்றவாறு கல்வி முறையாக சற்று மாற்றம் உற்றது. அந்த வகையில் குருகுலக்கல்வி முறையானது மரத்தடி நிழல்களிலும் ஒலைக்குடிசைகளிலும் சீடர்கள் அமர்ந்து குருவிடம் கல்வி கற்றனர். இவையே அக்கால கல்விக்கூடங்களாக திகழ்ந்தன. எனினும் தொடர்சச் ியாக மாறிவரும் சமூக அபிவிருத்திக்கு ஏற்ப படிப்படியான மாற்றங்கள் கல்வியிலும் கல்விக்கூடங்களிலும் ஏற்பட்டது. சாதாரண கட்டிடங்களாக மாற ஆரம்பித்த கல்விக்கூடங்கள் தற்பொழுது தொடர்மாடிக்கட்டிடங்களாகவும் மாறியுள்ளன. குருகுலக்கல்வியில் கல்வியை புகட்டுபவர் ''குரு'' என அழைக்கப்பட்டார். தற்காலத்தில் கல்வியினை பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்களை பல கட்டங்களாக வகுத்தும் அவர்களுக்கு பல பெயர்கள் வழங்கியும் நடைமுறையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

குருகுலகல்வியில் மோட்சம் அடைதலே கல்வியின் தலையான நோக்கமாக காணப்படுகிறது. தற்கால கல்வியின் நோக்கங்களாக உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக சிந்தனை, ஆன்மீக சிந்தனை வளர்ததல், போன்ற அம்சங்களை மக்களின் வாழ்வோடு இணைத்து வழங்கல் அகம். அதேபோல் கல்வி முறையும் பல மடங்கு விரிவு பெற்று பல மொழிகளிலும் கற்பிக்கப்படுகிறது. குருகுல கல்வி முறையில் சமஸ்கிருதம், தமிழ், பாளி மொழிகளில் கற்பிக்கப்பட்டது. தற்காலத்தில் ஆங்கிலம், தமிழ், சிங்களம், போன்ற மொழிகளுடன் உலகில் பேசப்பட்டு வரும் பல மொழிகளில் தற்கால கல்வி வழங்கப்படுகிறது. தற்காலத்தில் கல்வியானது பணம் நிறைந்தவர்களின் கைப்பொம்மையாகவும் மாறும் தறுவாயில் உள்ளது. அரசாங்கத்தினால் மட்டுமல்லாது பணம் படைத்தவர்களும் கல்வி நிறுவகங்களை அமைத்து பெறுமதியற்ற வகையில் கல்விக்கான சான்றிதழ்களையும் வழங்குகிறார்கள். ஆனால் ஆரம்ப காலத்தில் கல்வியானது மகத்தானதாகவும அதியுயர் பெறுமதியாகவும் போற்றி வழங்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் இக் கல்வியானது ஆசிரியர்கள் மூலமாக மட்டுமே மாணவர்களுக்கு நேரடியாக கற்பிக்கப்பட்டது. எனினும் இன்று பல துரித சமூக வலைத்தளங்க் ள் மூலமாக மாணவர்களுக்கு கிடைக்கின்றது. ஆரம்பகாலத்தில் ஏடுகளின் மூலமாக மாணவர்களுக்கு கல்வியானது குருவின் மூலம் வழங்கப்பட்டது. ஆனால் தற்காலத்தில் கல்வி வளர்ச்சியானது கணனி மூலமும் தொலைக்காட்சிகளின் மூலமும் தொலைபேசிகளின் மூலமும் குறிப்புக்கள், தரவுகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றமையை அவதானிக்கலாம். ஆகவே குருகுலக்கல்வி முறைக்கும் தற்காலகல்வி முறைக்கும் இடையில் பல்வேறுபட்ட வேறுபாடுகள் காணப்படுவதை மேலே விரிவாக தெளிவுபடுத்தி இருப்பதைக் காணலாம்.

**உசாத்துணை நூல்கள்**

பரமசிவானந்தம், அ.மு. (1991). கல்வி எனும் கண், தமிழ்க்கலை பதிப்பகம், சென்னை-30.

வேல்சாமி கவிராயர், எஸ். (1934). குருகுல வரலாறு, ஈரோடு சிவராம விலாஸ் பதிப்பகம், அப்பச்சிமார்மடம்.

இந்தியக்கல்வி முறை. (2009). வளநூல், தமிழ்நாட்டு பாடநூல் கழகம், சென்னை.

சிதம்பரனார், சா. (2004). பழந்தமிழர் வாழ்வும் வளரச் ்சியும், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.

பஸாம், ஏ.எல். (2005). வியத்தகு இந்தியா, விடியல் பதிப்பகம், சென்னை.